**அக்டோபர்:** 25

## பரிசுத்த ஆவியானவருடைய ஊழிய துவக்கம்.

**வாசிக்க: அப்போஸ்தலர்** 2:1-12

பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேச தொடங்கினார்கள். வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவபக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம்பண்ணினார்கள். அந்தச் சத்தம் உண்டானபோது, திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள். எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து; இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா? அப்படியிருக்க, நம்மில் அவரவர்களுடைய ஜென்மபாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி? எல்லாரும் பிரமித்துச் சந்தேகப்பட்டு, இதென்னமாய் முடியுமோ என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.





ஹலோ குட்டீஸ்,
நேற்று இயேசப்பா தாம் அனுப்ப போகிற பரிசுத்த ஆவியானவருக்காக எல்லோரையும் காத்திருக்க சொல்லி விட்டு பரலோகம் சென்றதை தியானித்தோம். அதன்பின் 12 சீஷரும் போய் அவரை நேசித்து, பின்பற்ற தங்களை அர்பணித்த எல்லோரையும் கூட்டிகொண்டு எருசலேமில் ஒரு மேல் வீட்டறையில் பயமிருந்தாலும் கூடி ஜெபித்து காத்திருந்தனர். பஸ்கா பண்டிகை முடிந்த 50 வது நாளான பெந்தெகொஸ்தே நாளில் காலை வேளையில் திடீரென பரிசுத்த ஆவியானவர் அவர்கள்மேல் அக்கினியை போல இறங்கி அபிஷேகித்தார். அந்த வீட்டை சுற்றி இருந்த பல பாஷைகாரர்கள் அக்கினி மயமான அற்புதத்தை பார்த்து நின்றுவிட்டனர். அப்பொழுது விசுவாசிகளெல்லாரும் புதிய பாஷைகளிலே தேவனுடைய மகத்துவங்களை பேச, அங்கேயிருந்த பல பாஷைகாரருக்கு அது புரிய ஆரம்பித்தது. எனவே எல்லோரும் இது எப்படி என ஆச்சரியப்பட்டனர். ஆவியானவர் அங்கே செய்த முக்கியமான மூன்று கிரியைகள்:
1) அவரை நம்பி விசுவாசித்து அவரில் அன்பு கூர்ந்தவர்களின் பயத்தை நீக்கிவிட்டார்.
2) மற்றவர்கள் முன்னால் தைரியமாக நின்று உயிர்த்தெழுதலை சாட்சியாக அறிவித்தனர்.
3) தம் பிள்ளைகளை ஏளனமாக பார்த்தவர்கள் நடுவில் அற்புதம் செய்து அவர்களெல்லாம் ஆச்சரியப்பட வைத்தார்.
உன்னையும் அப்படியே உயர்த்த விரும்புகிறார். ஆவியானவருடைய அபிஷேகத்தை கேட்டு வாஞ்சிப்பாயா?

கர்த்தருடைய வார்த்தை என்னவென்றால், பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். சகரியா 4:6

**ஜெபம்**

அன்பு தகப்பனே, அருமை இரட்சகரான இயேசுவே, தூய ஆவியானவரே, உங்க அற்புதமான அன்புக்கு நன்றி. என்னை உம் அபிஷேகத்தால் நிரப்பி அப்போஸ்தலரை போலவே பயன்படுத்தும். இயேசுவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்

